கி. சாரதா,
பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
துறைக்கரைப் பட்டி,
திருநெல்வேலி மாவட்டம்.
9080834005.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

TVL10T

திருநெல்வேலி மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 10

தமிழ்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 50

பகுதி - I (மதிப்பெண்கள் : 8)

8×1=8

1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினைச் சேர்த்து எழுதவும்.

1) மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும். மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ............

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

2) சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

3) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்

அ) உதயன், சேரலாதன் ஆ) அதியன், பெருஞ்சாத்தன்
இ) பேகன், கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன், திருமுடிக்காரி

4) காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ............

அ) இகழ்ந்தால் என் மனம் இறந்துவிடாது
ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என் மனம்
ஈ) என் மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

5) சிலம்புச்செல்வர் என்று அழைக்கப்படுபவர் ............

அ) மார்ஷல் ஏ. நேசமணி ஆ) ம.பொ.சி
இ) கு.ப. ராஜகோபாலன் ஈ) வள்ளலார்

6) ஆநிரைகளைக் கவர்ந்து வர மன்னன் சூடும்பூ ............

அ) கரந்தைப்பூ ஆ) வஞ்சிப்பூ இ) வெட்சிப்பூ ஈ) காஞ்சிப்பூ

7) மேன்மை தரும் அறம் என்பது ............

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

8) இருவர் உரையாடுவது போன்ற ஓசை

அ) தூங்கல் ஓசை ஆ) துள்ளல் ஓசை இ) அகவல் ஓசை ஈ) செப்பல் ஓசை

பகுதி - II (மதிப்பெண்கள் : 10)

பிரிவு - 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: 3×2=6

வினா எண் 13-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

9) பாசவர், வாசவர், பல்நிண விலைஞர் உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

10) காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

11) மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

12) குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.

13) ‘செயற்கை’ எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: 2×2=4

14) பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க:
அ) மறக்க நினைக்கிறேன் ஆ) கொஞ்சம் அதிகம்

15) மயங்கிய - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

16) கலைச்சொல் தருக:
அ) Consulate ஆ) Belief

பகுதி - III (மதிப்பெண்கள் : 6)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: 2×3=6

17) ''தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

18) கீழ்காணும் திருக்குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக:
கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.

19) ''மாற்றம் எனது'' எனத் தொடங்கும் காலக்கணிதப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பகுதி - IV (மதிப்பெண்கள் : 10)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 2×5=10

20) அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதவும்.

21) படம் உணர்த்தும் கருத்தை நயமுறு ஐந்து தொடர்களில் எழுதுக.
காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



பகுதி - V (மதிப்பெண்கள் : 16)

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 2×8=16

22) அ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றம் - மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

(அல்லது)

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

23) அ) குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக:
மாணவன் - கொக்கைப் போல - கோழியைப் போல - உப்பைப் போல் இருக்க வேண்டும். கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும். குப்பையைச் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும். கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும். ஆசிரியர் விளக்கம் - மாணவர் மகிழ்ச்சி.

(அல்லது)

ஆ) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

2

# II Mid Term Test திருநெல்வேலி

1. அ) திருப்பதியும் திருத்தணியும்.
2. இ) உழவு, ஏர், மண், மாடு
3. ஆ) அதியன், பெருஞ்சாத்தன்
4) அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது.
5) ஆ) ம.பொ.சி.
6) இ) வெட்சிப்பூ.
7) அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது.
8) ஈ) செய்யல் ஆசை.

9. பாசவர் - வெற்றிலை விற்பவர்
வாசவர் - வாசனைப் பொருள் விற்பவர்
பல்நிண விலைஞர் - பலவகை இறைச்சி விற்பவர்.
உமணர் - உப்பு விற்பவர்.

10. காலக்கரையை கட்டெறும்பானதும் கலைஞர் மீண்டும் வீட்டைச் சித்திரம் செய்தார்.

11. அரசர்கள் காலம் கடந்தும் தங்கள் புகழ் அழியாமல் இருப்பதற்காக மெய்க்கீர்த்தி பாடப்பட்டது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2

12. * வெண்பாவின் இலக்கணம் பெற்று வரும்
* இரண்டு அடிகளால் அமையும்.
* முதலடி நான்கு சீர்கள்.
* இரண்டாம் அடி மூன்று சீர்கள்.

13. செயற்கை அறிந்த கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல்.

14 அ) என் கவலைகளை மறக்க நினைக்கிறேன்

ஆ) இன்று வெயில் கொஞ்சம் அதிகம்

15. மயங்கிய.
மயங்கு + இ(ன்) + ய் + அ.
மயங்கு – பகுதி.
இ – இறந்தகால இடைநிலை
ன் – புணர்ந்து கெட்டது.
ய் – உடம்படு மெய்
அ – பெயரெச்ச விகுதி.

16. Consulate – துணைத்தூதரகம்
Belief – நம்பிக்கை.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பக்கம் :
நாள் : / /

17. இடம்: "சிற்றகல் ஒளி" பாடத்தில் ம.பொ.சி. அவர்களால் சொல்லப்பட்டது.

பொருள்: உயிரைக் கொடுத்தாவது சென்னையை மீட்போம்.

விளக்கம்: ஆந்திரத்தின் தலைநகராக சென்னை அமையும் என்ற கருத்து நிலவியது. அதனால் மாநகராட்சிக் கூட்டம் கூட்டப்பட்டது. கூடி அங்கு "தலையைக் கொடுத்தேனும் தலைநகரை மீட்போம்" என்று ம.பொ.சி. முழங்கினார்.

18.

| சீர்கள் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| கரு/வியும் | நிரை – நிரை | கருவிளம் |
| கா/லமும் | நேர் – நிரை | கூவிளம் |
| செய்/கை/யும் | நேர் – நேர் – நேர் | தேமாங்காய் |
| செய்/யும் | நேர் – நேர் | தேமா. |
| அரு/வினை/யும் | நிரை – நிரை – நேர் | கருவிளங்காய் |
| மாண்/ட | நேர் – நேர் | தேமா |
| அமைச்/சு. | நிரைபு | பிறப்பு. |

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

உ



19. மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்பது அறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்பவர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

20. நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம்

அ) அனுப்புநர்

இஅஅ,
அரசுமேல்நிலைப்பள்ளி,
ஆஆஆ ஊர்,
இஇஇ - மாவட்டம்.

பெறுநர்

தினநாளிதழ் ஆசிரியர் அவர்கள்,
தினநாளிதழ் அலுவலகம்,
இஇஇ - மாவட்டம்.

ஐயா,

பொருள்: கட்டுரையை வெளியிட வேண்டி.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com





"உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதித் தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பி உள்ளேன். எனது கட்டுரையை பொங்கல் மலரில் வெளியிடுமாறு பணிந்து வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

ஆஆஆ ஊர் தங்கள் உண்மையுள்ள,
25.11.2024. அஅஅ.

உறைமேல் முகவரி

பெறுநர்

திணநாளிதழ் ஆசிரியர் அவர்கள்,
தின நாளிதழ் அலுவலகம்,
இஇஇ - மாவட்டம்.

---

ஆ) மின்வாரிய அலுவலகத்துக்குக் கடிதம்:

அனுப்புநர்:

இஇஇ,
அஅஅ ஊர்,
ஆஆஆ மாவட்டம்.

பெறுநர்.

மின்வாரிய அலுவலர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
ஆஆஆ மாவட்டம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ஐயா,

பொருள்: மின்விளக்குகளைப் பழுது பார்க்க வேண்டி.

எங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. எனவே மின்விளக்குகள் சரி செய்யும்படி பணிந்து வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

அஅஅ ஊர் தங்கள் உண்மையுள்ள,

25.11.2024. இஇஇ.

உறைமேல் முகவரி:

பெறுநர்:

மின்வாரிய அலுவலர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
ஆஆஆ - மாவட்டம்.

---

31. ஒருவருக்குக் கொடுப்பதை ஒருபோதும் தடுக்காதே.
இருப்பதைக் கொடு.
இல்லையென்று சொல்லாதே
இறைத்த கிணறுதான் ஊறும்
கொடுக்க கொடுக்கதான் பெருகும்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com